DEPOSITION OF WITNESS

(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM

C.C.No.91/2021

PW - 1

| | | |
|---|---|---|
| Name | : | குணாநிதி |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------26

**(**எதிரி ஆஜர் இல்லை கு.வி.மு.ச.பிரிவு **317-**ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**)**

கு.வி.மு.ச. பிரிவு **311**ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை **Date : 29.05.2026**

எனக்கு கத்தரி, தக்காளி, மிலகாய் ஆகியவற்றை சில்லரை வியாபாரமாக செய்து வருகிறேன் என்று சொல்லியுள்ள நிலையில் அதன் மூலம் எனக்கு வருமானமானது சில்லரையாக கிடைக்குமா அல்லது மொத்தமாக கிடைக்குமா என்றால் சில்லரையாக கிடைக்கும். சில்லரையாக எவ்வளவு கிடைக்கும் என்றால் சில நாட்களில் ரூ.1,000/- - ரூ.2000/- கிடைக்கும் சீசன் சமயங்களில் ரூ.4,000/- - ரூ.5,000/- கிடைக்கும். எனது அப்பாவின் பெயர் பாலாஜி ஆகும், எனது அம்மாவின் பெயர் ராணி ஆகும்.

எதிரிக்கு நான் எங்கு வைத்து பணம் கொடுத்தேன் என்றால் எனது வீட்டில் வைத்து கொடுத்தேன். நான் எதிரிக்கு பணம் கொடுத்த சமயத்தில் யார் யார் இருந்தார்கள் என்றால் எனது அம்மாவும் அப்பாவும் இருந்தார்கள். எதிரிக்கு நான் பணம் கொடுத்ததாக சொல்வது பொய் என்றாலும், எதிரிக்கு எனது அம்மா அப்பா யார் என்றே

தெரியாது என்றாலும், நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் எதிரிக்கு காசோலை தொகையை ரொக்கமாக 14 ரூ.500/- கட்டுகளாக கொடுத்தேன் என்று சொல்லியுள்ள நிலையில் அச்சமயத்தில் நான் வங்கி வரவு செலவு எதுவும் செய்யாததால் என்னிடம் அவ்வளவு ரூ.500/- ரூபாய் நோட்டுகள் இருந்திருக்க வாய்ப்பு இல்லை என்றால் சரியல்ல. நான் சந்தை கேட்டில் எனது பணத்தை ரூ.500/- நோட்டுகளாக மாற்றிக்கொள்வேன். நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை: இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowledged by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**